**செய்தி வெளியீடு எண்: 47** **நாள்: 22.01.2013**

செய்தி வெளியீடு

நல்ல காவல் என்பதற்கு இலக்கணமாக, நாட்டின் பொது அமைதி காத்து, பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் தலை தூக்கா வண்ணம் நடவடிக்கை எடுத்து மக்கள் நலனை காத்து வருகின்ற துறையாக தமிழக காவல் துறை விளங்குகிறது. மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப புதுமையும், திறமையும் பெற்று மக்கள் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு காவல்துறை செயலாற்றி வருகிறது.

தமிழக காவல்துறை இந்தியாவிலேயே சிறந்த காவல்துறையாக விளங்குகிறது. இந்த சிறப்பை இன்னும் உயர்த்துகின்ற வகையில், காவல் துறையை நவீனப்படுத்துவது, புதிய சாதனைகளைப் படைக்க ஊக்கப்படுத்துவது, போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள்.

பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக விளங்குவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையவும் உறுதுணையாக, கடமை உணர்வுடன் பணியாற்றுபவர்கள் காவலர்கள். அத்தகைய காவலர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் வகையில், அவர்களுக்கான குடியிருப்புகள் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலேயே இருக்கவேண்டும் என்றும், காவலர்களுக்கான குடியிருப்பு வசதியில் 100 விழுக்காடு தேவையையும் நிறைவு செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழகத்தில் காவல் பணியாளர்களுக்காக இதுவரை 50,424 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தற்பொழுது 7,526 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு 287 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,440 குடியிருப்புகள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

அதேபோன்று, இந்த ஆண்டும் காவல்துறை பணியாளர்களுக்காக 472 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் 4,340 குடியிருப்புகள் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதில் காவல்துறை கண்காணிப்பாளர் / துணைஆணையர்/ கமாண்டன்ட்டுக்கு, 2446 சதுர அடியில் 6 குடியிருப்புகளும், துணை காவல்துறை கண்காணிப்பாளர் /உதவி கமாண்டன்டுக்கு 1,100 சதுர அடியில் 7 குடியிருப்புகளும், காவல்துறை ஆய்வாளர்களுக்கு 850 சதுர அடியில் 62 குடியிருப்புகளும், காவல்துறை சார்நிலை ஆய்வாளர்களுக்கு 850 சதுர அடியில் 170 குடியிருப்புகளும், தலைமை காவலர் மற்றும் காவலர்களுக்கு 650 சதுர அடியில் 4,095 குடியிருப்புகளும், ஆக மொத்தம் 4,340 குடியிருப்புகள் கட்டப்படும். இப்பணிகளுக்கான முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி விடுவித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை நகர், தமிழகத்தின் தலைநகராக விளங்குவதால், இங்கு மத்திய மற்றும் இதர மாநிலங்களிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதற்காக முக்கிய பிரமுகர்கள் அதிக அளவில் வருகின்றனர். அவர்களின் பாதுகாப்புக்காகவும், நகரில் சட்டம்

மற்றும் ஒழுங்கை பராமரிக்க தேவையான நெருக்கடி காலங்களிலும், பிற இடங்களில் பணியில் உள்ள காவலர்கள் பணிக்காக அழைக்கப்படுவர். அவர்கள் தங்குவதற்காக சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் படை குடியிருப்பு ஒன்று உள்ளது. இந்த படைக்குடியிருப்பு மிகவும் பழமை வாய்ந்த கட்டடமாக உள்ளதால், அந்தக் கட்டடத்தை 2 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 500 காவலர்கள் தங்குவதற்கு வசதியாக, 2 மாடி கொண்ட கட்டடமாக 1,593 சதுர மீட்டர் பரப்பளவில் புனரமைத்து கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இயற்கை சீற்றங்களான புயல், வெள்ளம், போன்றவற்றால் பாதிப்புகள் ஏற்படும் சமயங்களில் எல்லாம் மின்னல் வேகத்தில் நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவில் இயல்பு நிலை திரும்பச் செய்யும் பணிகளை செய்ய அதிக அளவில் மனித ஆற்றல் தேவைப்படும். எனவே இயற்கை இடர்பாட்டுக் காலங்களில், அரசுத்துறை அலுவலர்களுக்கு துணையாக செயல்பட சென்னை, மாமல்லபுரம், திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் குடிமை பாதுகாப்பு அலகுகள் (Civil Defence Corps) தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சென்னை மாநகருக்கு 500 நபர்களும், மாமல்லபுரத்திற்கு 200 நபர்களும், திருநெல்வேலிக்கு 100 நபர்களும், மதுரைக்கு 100 நபர்களும் மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு 100 நபர்களும் கொண்ட குடிமை பாதுகாப்பு அலகுகள் அமைக்கப்படும். இவர்களுக்கு உரிய பயிற்சி வழங்குதல் போன்ற தொடரா செலவினங்களுக்கு 89 லட்சம் ரூபாய் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள், குடிமை பாதுகாப்பு அலகுகளின் மாவட்ட கட்டுப்பாட்டு அலுவலராகவும் (District Controller), துணை ஆட்சியர்/கோட்ட ஆட்சியர், துணை கட்டுப்பாட்டு அலுவலராகவும் (Deputy Controller) செயல்படுவார்கள்.

சமூக விரோதிகள் தப்பி செல்வதை தடுத்தல், அத்தியவாசிய பொருட்கள், மணல் போன்ற கடத்தல்களை தடுத்தல் என பல்வேறு பணிகளுக்காக மாவட்ட எல்லையோரங்கள் மற்றும் மாநில எல்லையோரப் பகுதிகளில் காவல் துறை சார்பாக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது 107 காவல் சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. இச் சோதனைச் சாவடிகளை வலுப்படுத்தவும். நவீனமயமாக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக 25 சோதனை சாவடிகளை, தலா 16.17 லட்சம் செலவில் நவீனமயமாக்க 4 கோடியே 15 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த தொகையில், சோதனை சாவடிக்கு கட்டடம் கட்டுதல், தளவாட சாமான்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் வாகனங்கள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழக காவல்துறைக்கு ஆண்டுதோறும் புதிய காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் காவல்துறையில் திறம்பட பணியாற்றுவதற்காக அவர்களுக்கு பல்வேறு காவல் பயிற்சி பள்ளிகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பின்னர் பணியில் சேர்க்கப்படுகின்றனர். 2012 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவாக 12,208 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதன் பின்னரே வெவ்வேறு மாவட்டங்களிலும், காவல் அலகுகளிலும் பணியமர்த்தப்படுகின்றனர். வரும் ஆண்டுகளிலும் பயிற்சிக்கான தேவை தொடரும். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காவல்

துறையினருக்கான பயிற்சி கட்டமைப்புகளை வலுப்படுத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள ஆயுதப்படை வளாகங்கள், சிறப்புக் காவல் படை வளாகங்கள் மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளிகள் போன்ற 37 இடங்களில் வகுப்பறைகளை புதுப்பித்தல், குடிநீர் மற்றும் கட்டமைப்பு வசதிகளை சீர்செய்தல், கவாத்து மைதானங்களை சீரமைத்தல், சமையல் மற்றும் உணவுக் கூடங்கள், பயிற்சியாளர் தங்குமிடங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிதாக கட்ட மொத்தம் ரூ.14.95 கோடி அனுமதித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

போதைப் பொருட்கள் நாட்டின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் ஊறுவிளைவிப்பதோடு மட்டுமல்லாமல், பொதுநலனுக்கும், மனிதகுலத்திற்கு குறிப்பாக இளைஞர்களுக்கு கேடு விளைவிப்பதாக உள்ளது. இக்கொடுமையை களைவதற்காக, தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவினை வலுப்படுத்துவதற்காக 36 லட்சத்து 32 ஆயிரத்து 430 ரூபாய் செலவில், போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவிற்கென வீடியோ கேமரா 2, டிஜிட்டல் கேமரா 1, பொலிரோ ஜீப் 4, மோட்டார் சைக்கிள் 8, கம்ப்யூட்டர் மற்றும் அதன் உபகரணங்கள் 7, ஆகியவை வாங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் பணிகள் சிறக்க, அக்காவல்படைக்கென 69.01 லட்சம் ரூபாய் செலவில் 4 பேருந்துகள் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் குற்றவியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக குற்றவாளிகளை கண்டு பிடிப்பதற்கு அவர்கள் விட்டுச் செல்கின்ற தடயங்கள் மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய தடயங்களை ஆராய்வதற்காக துவக்கப்பட்டுள்ள தடய அறிவியல் துறையின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மற்றும் கோவை மண்டல தடய அறிவியல் ஆய்வகங்களில் ரத்த மாதிரிகளை பரிசோதிக்கும் வசதிகளுடன் குருதி வடிநீரியல் ஆய்வு பிரிவுகள் இரண்டு ஏற்படுத்தவும், இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் பணியாற்ற ஒரு உதவி இயக்குநர், ஒரு அறிவியல் உதவியாளர் நிலை II மற்றும் ஆய்வக உதவியாளர் என மொத்தம் 6 பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கவும், இப்பிரிவுகளுக்கென இயந்திரங்கள், தளவாடங்கள், அறைகலன்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்காக 53 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் காவலர்களிடையே ஓர் உற்சாகத்தையும், மேன்மேலும் திறமையாக பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கும்.

********

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 22.1.2013.